# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093863

1. District : DVAC PS: DVAC HQrs Year: 2019 FIR No.: 5 Date: 19.2.19
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2015 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Cr.Pc Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18.2.19 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 19.2.19 Time : 1700Hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 19.2.19 Time : 1700hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North 6Kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Office of the Sub Registrar, Ashok Nagar No 502, Alagirisamy road K.K. Nagar, Chennai-78.
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tmt. V. Sumathi (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : District Inspection cell officer (g) Address : Chennai collectorate Chennai District
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) M. Praveena Sub Registrar, Ashok Nagar O/o the Sub Registrar Ashok Nagar
2) A. Sugavanam Junior Assistant, Ashok Nagar O/o the Sub Registrar Ashok Nagar
3) Tmt. Uma Parameswari Data Entry operator O/o the Sub Registrar Ashok Nagar
4) Tmt. Revathi JPCamera operator O/o the Sub Registrar Ashok Nagar

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– No delay –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : Amount Rs 1 88.900/-
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

FIR Contents is enclosed in a separate sheet.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S.Se[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. SENTHILKUMAR
Rank: நிலை Inspector of Police …… No. எண் ……
V& AC, SIC, Chennai.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண். 5/2019 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 மற்றும் Cr.PC பிரிவு 102 வழக்கின் முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.12 ன் தொடர்ச்சி பின்வருமாறு.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிறப்பு புலனாய்வு பிரிவு (1) ஆய்வாளர் சு.செந்தில் குமார் ஆகிய நான் 19.02.2019 அன்று 16.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திருமதி.வே.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.வா.பாஸ்கரன், துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வுப் பிரிவு-1, சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப 17.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.5/2019 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 2018 மற்றும் கு.வ.மு.ச பிரிவு 102 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தேன், மனுவின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் திருமதி.வே.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை, பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு பிரிவு-2, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ஆலந்தூர் சென்னை-16. ந.க.எண்.அ/102/2019 நாள் 18.02.2019, அய்யா, பொருள்- இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை - சென்னை-78, கே.கே.நகர், அழகிரிசாமி சாலை, நெ.602, முதல் தளத்தில் இயங்கி வரும் அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை நாள் 18.02.2019 - ஆய்வு குறிப்பு அனுப்புதல் - தொடர்பாக சென்னை மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் சென்னை, சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இணைந்து இருதுறை திடீர் கூட்டுத் தணிக்கை இன்று 18.02.2019-ம் தேதி சென்னை-78, கே.கே.நகர், அழகிரிசாமி சாலை, நெ.602, முதல் தளத்தில் இயங்கி வரும் அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இரு துறை திடீர் கூட்டு தணிக்கையின் போது மேற்படி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் ரூ.1,88,900/- (ரூபாய் ஒரு லட்சத்து

எண்பத்தெட்டாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்), அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்பு பதிவேடு (02.01.2019 தேதி முதல் 18.02.2019 தேதி வரை) ஆகியவை கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த கூட்டுத் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள், பணம் ரூ.1,88,900/-, அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலக தனி நபர் பண இருப்பு பதிவேடு மற்றும் 2019 ஆம் ஆண்டு வருகை பதிவேட்டின் பிப்ரவரி மாத உண்மை நகல், இத்துடன் (1) திரு.ஜானகிராமன் த/பெ. T.S.மணி (2) திரு.கு.சரவணன் த/பெ. குப்பன் (3) திரு.பெ.ரமேஷ் த/பெ. பெருமாள் (4) திரு.அ.சுகவனம், இளநிலை உதவியாளர் ஆகியோரிடம் பெறப்பட்ட வாக்குமூலங்கள் உரிய மேல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இத்துடன் அசலாக ஒப்படைக்கப்படுகிறது. மேற்படி கூட்டுத் தணிக்கை நடவடிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தங்கள் நம்பிக்கைக்குரிய, ஒப்பம் திருமதி.வே.சுமதி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், சென்னை இணைப்பு மேற்கண்டவாறு. 19.02.2019 Tr.S.Senthil Kumar, Inspector of Police registered a case and investigate. Sd// V.Baskar, Deputy Superintendent of Police, Received the letter at 17.00 hrs on 19.02.2019 and registered a case in V&AC Head Quarters Cr.No.5/2019 u/s 7 of the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.PC Sd//-S.SENTHILKUMAR, INSPECTOR/SIC-1, 19.02.2019.

சென்னை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.வே.சுமதி, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சிறப்பு புலனாய்வுக் குழு-1, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர்கள் ஆகியோர் இணைந்து இன்று 18.02.2019-ம் தேதி மாலை சுமார் 5.15 மணியளவில் சென்னை-78, கே.கே.நகர், அழகிரிசாமி சாலை, நெ.602, முதல் தளத்தில் இயங்கி வரும் அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டு தணிக்கை அறிக்கை.

| | |
|---|---|
| இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள் | 1. திருமதி.வே.சுமதி<br>மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்,<br>சென்னை.<br><br>2. திரு.வா.பாஸ்கரன்,<br>காவல் துணை கண்காணிப்பாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு-1,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16.<br><br>3. திரு.ஜா.லாரன்ஸ்,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.<br><br>4. திருமதி.J.கிறிஸ்டி,<br>காவல் ஆய்வாளர்,<br>சிறப்பு புலனாய்வு குழு,<br>ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை. |

சென்னை-78, கே.கே.நகர், அழகிரிசாமி சாலை, நெ.602, முதல் தளத்தில் இயங்கி வரும் அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவிற்கு வரும் பொதுமக்களிடம் பத்திர பதிவு செய்வதற்கு நேரடியாக கையூட்டு கேட்டு பெற்றுக் கொண்டு ஆவணங்கள் பதிவு செய்யப்படுவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகத்தில் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இவ் அலுவலகமானது கே.கே.நகர் அழகிரிசாமி சாலை எண்.602 என்ற கட்டிடத்தில் முதல் தளத்தில் இயங்கி வருகிறது. மேலும் இந்த அலுவலகத்தின் பிரதான வாசல் வடக்கு நோக்கி அமைந்துள்ளது. கூட்டு தணிக்கை மேற்கொண்டபோது மேற்படி அலுவலகத்தில் பிரதான அறையின் தெற்கு மூலையில் சார் பதிவாளர் அவர்கள் கிழக்கு நோக்கி அமர்ந்தவாறு

அலுவலில் இருந்தார். அவருக்கு எதிரே அலுவலக உதவியாளர் திரு.ரகு மற்றும் திரு.அ.சுகவனம், இளநிலை உதவியாளர் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்களின் வடக்கு பக்கத்தில் தனியாக பிரிக்கப்பட்ட கணினி அறையில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டர் திருமதி.உமாபரமேஸ்வரி மற்றும் அவருக்கு அருகில் கேமரா ஆப்ரேட்டர் திருமதி.ரேவதி ஆகியோர் அலுவலில் இருந்தனர். பிரதான அறையின் மூலையில் மேற்கு பக்கம் கிழக்கு நோக்கிய வாசல் கொண்ட ஆவண அறை அமைந்துள்ளது. அதனையொட்டி மற்றொரு ஆவண அறை தெற்கு நோக்கி வாசலுடன் அமைந்துள்ளது. பிரதான அறையின் தெற்கு பக்கத்தில் வடக்கு நோக்கிய வாயிலுடன் ஓர் அறையும் உள்ளது. பிரதான அறையில் தனது இருக்கையில் அமர்த்திருந்த அசோக்நகர் சார் பதிவாளர் திருமதி.மோ.பிரவினா அவர்களிடம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களிடம் தனி நபர் பண இருப்பு பதிவேடு கேட்க அவர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் 1 முதல் 103 பக்கங்கள் கொண்ட பதிவேட்டை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேடு 02.01.2019 தேதி முதல் 18.02.2019 தேதி வரை அலுவலர்கள் அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வரும் தனது சொந்த பணத்தை குறிப்பிட்டு இருந்தனர். அதை மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் ஆய்வு செய்ய இன்று 18.02.2019 அன்று திரு.மு.ரகு, அலுவலக உதவியாளர் ரூ.300/-ம், திருமதி.மோ.பிரவினா, சார் பதிவாளர் அவர்கள் ரூ.500/-ம் கொண்டு வந்துள்ளதாக குறிப்பிட்டு கையொப்பமிட்டிருந்தனர். சான்றொப்பமிட்ட தனி நபர் பண இருப்பு பதிவேட்டினை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் விசாரணைக்காக கைப்பற்றினார். சார் பதிவாளர் இருக்கையை சோதனையிட அங்கு எந்தப் பணமும் கைப்பற்றப்படவில்லை. அவரை விசாரிக்க தான் காலை அலுவலகத்திற்கு வரும் போது கொண்டு வத்திருந்த ரூபாய் 500/- (500x1=Rs.500/-) மட்டும் உள்ளதாக எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் ஏற்கனவே தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் அவரால் குறிப்பிட்டிருந்ததால் அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்பு சார் பதிவாளருக்கு எதிரே அமர்ந்திருந்த அலுவலக உதவியாளர் திரு.ரகு என்பவரை விசாரிக்க இன்று காலை அலுவலகம் வரும்போது கொண்டு வந்திருந்த ரூ.300/- (100x3=Rs.300/-)

மட்டும் உள்ளதாக எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் ஏற்கனவே தனி நபர் பண இருப்பு பதிவேட்டில் அவரால் குறிப்பிட்டிருந்ததால் அந்தப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பிறகு அவர் அருகில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திரு.சுகவனம் அவர்களின் இருக்கையை சோதனையிட அங்கு பணம் ஏதும் காணப்படவில்லை. அவரிடம் உள்ள பணம் குறித்து விசாரிக்க அவர் ரூ.100/- (100x1=Rs.100/-) இருந்தது எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணம் தனது கைசெலவிற்காக கொண்டு வந்ததாகவும், தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் தான் பதிவு செய்யவில்லை என்றும் தெரிவித்ததால் அவரிடமே அப்பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து அலுவலகத்தின் கணினி அறையினை சோதனை செய்த போது திருமதி.ரேவதி, IP கேமரா ஆப்ரேட்டர் அவர்களின் இருக்கைக்கு அருகில் கீழே ரூ.1500/- (500x3=Rs.1,500/-) கிடந்தது. அந்தப்பணம் குறித்து திருமதி.ரேவதியிடம் கேட்க, அப்பணம் தனது பணம் இல்லையென்றும் அப்பணம் அங்கு எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் குறிப்பிட்டதால் அப்பணம் ரூ.1500/- (500x3=Rs.1,500/-) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து அவர் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரே இருந்த கணிணி கீ போர்டு அடியில் சோதனை செய்ய ரூ.1450/- (ரூ.500x2=Rs.1000/-, 200x1=Rs.200/-, 100x2=Rs.200/-, 50x1=Rs.50/-) இருந்தது. அப்பணம் குறித்து விசாரிக்க இன்று இரண்டு திருமணம் பதிவிற்காக ரொக்கமாக செலுத்தப்பட்ட பணம் முறையே ரூ.180/-, ரூ.170/- மொத்தம் ரூ.350/- என்றும், மேலும் இரண்டு திருமண பதிவிற்கு கட்டணம் e-payment மூலம் வந்ததாக கூறி இரசீதுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் ஆய்வு செய்து அரசாங்க கட்டணம் ரூ.350/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மீதத் தொகை ரூ.1100/- (500x2=Rs.1000/-, 100x1=Rs.100/-) குறித்து விசாரிக்க அப்பணம் குறித்து விளக்கம் ஏதும் சரியாக கூறாததாலும் மேலும் அப்பணம் குறித்து தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவு இல்லாததாலும் விசாரணைக்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. அவருக்கு அருகில் அமர்ந்திருந்த டேட்டா என்ட்ரி

ஆப்ரேட்டர் திருமதி. உமா பரமேஸ்வரியின் இருக்கையை சோதனை செய்ய அவர் இருக்கை எதிரே இருந்த கணினியின் கீ போர்டு அடியில் ரூ.3000/- (500x6=Rs.3000/-) மடித்து வைக்கப்பட்ட நிலையில் இருந்தது. அப்பணம் குறித்து அவரிடம் விசாரிக்க அப்பணம் குறித்து விளக்கம் ஏதும் சரியாக கூறாததாலும் மேலும் அப்பணத்தை தனி நபர் பணம் இருப்பு பதிவேட்டில் பதிவு இல்லாததாலும் விசாரணைக்காக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் கைப்பற்றப்பட்டது. பிரதான அறையில் சார் பதிவாளர் இருக்கைக்கு வடபுறத்தில் கிழக்குநோக்கி அமர்ந்திருந்த உதவியாளர் திருமதி.சிவசுந்தரி என்பவரின் இருக்கையினை சோதனை செய்ய அவரிடமோ அவரது இருக்கைக்கு எதிரில் இருந்த மேஜை டிராயரிலோ எவ்வித பணமும் காணப்படவில்லை. அதனை தொடர்ந்து பதிவேடுகள் அறையினை சோதனை செய்தபோது, பதிவேடு அறையின் தென் மேற்கு மூலையில் வைக்கப்பட்டிருந்த இரும்பு பீரோவில் பதிவேடுகளுக்கு இடையே கட்டாக பணம் காணப்பட்டது. அந்தப் பணத்தை ஆய்வுக்குழு அலுவலர், சார் பதிவாளர் திருமதி.மோ.பிரவினா மற்றும் இளநிலை உதவியாளர் திரு.சுகவனம் ஆகியோர் முன்னிலையில் எடுத்து எண்ணிப் பார்க்க ரூ.2000x71=Rs.1,42,000/-, ரூ.500x82=Rs.41,000/-, ரூ.200x1=Rs.200/-, ரூ.100x1=Rs.100/- ஆக மொத்தம் ரூ.1,83,300/- இருந்தது. அந்தப் பணம் குறித்து இளநிலை உதவியாளர் திரு.சுகவனத்தை விசாரிக்க இப்பணம் இவ்வலுவலகத்திற்கு பதிவிற்காக வரும் பொதுமக்களிடம் கையூட்டாக பெற்றப்பணம் என்றும் இப்பணம் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அனைவருக்கும் தகுதிக்கேற்றவாறு பிரித்து கொடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் இப்பணம் குறித்து சார் பதிவாளர் அவர்களை விசாரிக்க பணம் குறித்து ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும் விசாரிக்க தனது அலுவலகத்தில் பதிவேடுகள் அறையில் உள்ள பீரோவில் பதிவேடுகளுக்கு இடையில் காணப்பட்ட பணம் ரூ.1,83,300/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்து மூவாயிரத்து முன்னூறு மட்டும்) பற்றி தனக்கு ஏதும் தெரியாது என்றும் அந்தப் பணம் யார் அங்கு வைத்தார்கள் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார். எனவே

இப்பணம் பத்திர பதிவிற்காக இவ்வலுவலகத்திற்கு வந்த பொதுமக்களிடம் இருந்து கையூட்டாக பெற்றப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் மேற்படி பணம் ரூ.1,83,300/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இன்று 18.02.2019-ம் தேதி காலை முதல் தற்போது வரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவிற்கு தாக்கலான 32 ஆவணங்களில், 29 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டும் 3 ஆவணங்கள் நிலுவையிலும் உள்ளது என்று சார் பதிவாளர் தெரிவித்தார். மேலும் இந்த ஆவணப் பதிவிற்கு எவ்வித ரொக்கப்பணமும் வசூல் செய்யப்படவில்லை என தெரிவித்தார். மேலும் சார் பதிவாளர் அலுவலக வருகை பதிவேட்டினை ஆய்வு செய்ய இன்று 18.02.2019, சார் பதிவாளர் திருமதி.மோ.பிரவினா, உதவியாளர் திருமதி.சிவசுந்தரி, இளநிலை உதவியாளர் திரு.சுகவனம், அலுவலக உதவியாளர் திரு.ரகு ஆகியோர் வருகை பதிவேட்டில் கையொப்பமிட்டுள்ளனர். உதவியாளர் திருமதி.சரஸ்வதி அவர்கள் மாற்று பணியில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இரு துறை கூட்டுத் தணிக்கையின் போது சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த திரு.ஜானகிராமன் த/பெ. T.S.மணி என்பவரை விசாரிக்க அவர் இவ்வலுவலகத்திற்கு வில்லங்க சான்று பெறுவதற்கு மாலை 5 மணிக்கு வந்ததாகவும், தனது மனைவி திருமதி.விஜயலஷ்மி என்பவர் SVK Enterprises என்ற பெயரில் இவ்வலுவலகத்திற்கு பக்கத்தில் பத்திர எழுத்தராக தொழில் செய்து வருவதாக கூறினார். அவரிடம் இருந்து எந்தப்பணமும் கைப்பற்றப்படவில்லை. அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இதனை அடுத்து இவ்வலுவலகத்தில் இருந்த திரு.கு.சரவணன் த/பெ. குப்பன் என்பவரை விசாரிக்க அவர் ZIGMA TECHNOLOGIES INDIA (P) LTD -ல் நெட்வொர்க் இன்ஜினியராக பணியாற்றி வருவதாகவும், இவ்வலுவலகத்தில் கணிணி மற்றும் கேமரா பராமரிப்பு மற்றும் ஆய்வுக்காக தன்னை அழைத்ததின் பேரில் தான் வந்திருந்ததாகவும் அவரை சோதனை செய்ய ரூ.9000/- (Rs.500x18=Rs.9000/-) இருந்தது. அந்தப் பணம் குறித்து விசாரிக்க அது தனது தாயாரின் மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாக கூறியதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப

ஒப்படைக்கப்பட்டது. அவரிடம் இருந்து எந்தப்பணமும் கைப்பற்றப்படவில்லை. ஆய்வுக்குழு அலுவலர் அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்பு இவ்வலுவலகத்தில் இருந்த திரு.பெ.ரமேஷ் த/பெ. பெருமாள் என்பவரை விசாரிக்க அவர் சார் பதிவாளர் அருகில் உள்ள Sky Properties Consultant என்ற அலுவலகத்தில் திரு.முகமது என்ற பத்திர எழுத்தரிடம் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். தான் இன்று சுமார் மாலை 5 மணியளவில் திருமணம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய அவரிடம் ரொக்கப்பணம் ஏதும் காணப்படவில்லை. அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கை இன்று 18.02.2019 இரவு 10.15 மணியளவில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின் போது அலுவலகத்தின் அன்றாடப் பணிகளுக்கோ பொது மக்களுக்கோ அலுவலக ஊழியர்களுக்கோ உடமைகளுக்கோ எவ்வித இடையூறோ சேதாரமோ இல்லாமல் மேற்கொள்ளப்பட்டது.

ஒப்பம்// (வே.சுமதி), மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், சென்னை மாவட்டம்.

ஒப்பம்// (வா.பாஸ்கரன்), காவல் துணை கண்காணிப்பாளர், சிறப்பு புலனாய்வு குழு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, , சென்னை.

ஒப்பம்// (ஜா.லாரன்ஸ்), காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை.

ஒப்பம்// (J.கிறிஸ்டி), காவல் ஆய்வாளர், சிறப்பு புலனாய்வு குழு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை.

ஒப்பம்// (அ.சுகவனம்), இளநிலை உதவியாளர், அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகம்.

ஒப்பம்// (மோ.பிரவினா), சார் பதிவாளர், அசோக்நகர் சார் பதிவாளர் அலுவலகம்.

S.S[signature] 19.2.19

S. SENTHILKUMAR
Inspector of Police
V&AC, SIC-1